

# சர்வதேச எண்ணில் இருந்து வரும் அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் பற்றி கவலைப்படுகிறீர்களா?

சர்வதேச அழைப்பு மற்றும் குறுஞ்செய்தி தடுக்கும் அம்சங்களை உபயோகியுங்கள்.

இந்த அம்சங்களை உங்கள் தொலைபேசி நிறுவனங்களிடமிருந்து (Singtel, M1, StarHub, SIMBA) **இலவசமாக** பெற்றுக் கொள்ளலாம்.

## 1

**இந்த அம்சங்களைப் பயன்படுத்தி சர்வதேச எண்களிலிருந்து உள்வரும் அனைத்து அழைப்புகளையும், குறுஞ்செய்திகளையும் தடுக்கலாம்.**

- சர்வதேச எண்களிலிருந்து அழைப்புகள் அல்லது குறுஞ்செய்திகளை எதிர்பார்க்காதவர்களுக்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

* சிங்கப்பூர் எண்களிலிருந்து உள்வரும் அழைப்புகளையும் குறுஞ்செய்திகளையும் (உ.தா. - சிங்கப்பூர் பயனர்கள் வெளிநாட்டிலிருந்து ரோமிங் மூலம் வீட்டிற்கு அழைப்பது அல்லது குறுஞ்செய்தி அனுப்புவது) வழக்கம் போல் பெற முடியும்.







## 2

**நீங்கள் வெளியூர் பயணம் செய்யும் போது இவ்வம்சங்களை முடக்கலாம். சிங்கப்பூர்க்குத் திரும்பியதும் அவற்றை மீண்டும் செயல்படுத்தலாம்.**

- மாற்றங்களைச் செயல்படுத்த தேவையான கால அவகாசத்தை உங்கள் தொலைபேசி நிறுவனங்களிடம் விசாரிக்கவும்.



**இவ்வம்சங்களைச் செயல்படுத்தி, சர்வதேச தொலைபேசி அழைப்பு, குறுஞ்செய்தி மோசடிகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள உங்கள் தொலைபேசி நிறுவனங்களைத்** (Singtel, M1, StarHub, SIMBA) **தொடர்பு கொள்ளவும்.**